1989 ஏப்ரல் 24]

(ஊ) சென்னை கஸ்தூரிபா மருத்துவமனையில் மின்தடையால் சிகிச்சை பாதிப்பு.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, I seek your permission for making a submission. மின்சாரத் துறையாக இருந்த காரணத்தால் உங்கள் தீர்ப்புக்கு முன்பாக நான் துரிதமாக எழுந்து விட்டேன். ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை அறுவை சிகிச்சையின் மூலமாக எடுக்கப்பட வேண்டும் என்ற நிலையில் $6\frac{3}{4}$ மணிக்கு சிகிச்சை தொடங்கிய உடனே 7 மணிக்கு மின்சாரத் தடை ஏற்பட்டு ஒரு மணி நேரம் மின்சாரம் வராத காரணத்தால், மீண்டும் மின்சாரம் வந்த போது அந்தக் குழந்தை இறந்து விட்டது தெரிந்தது. எனவே பிறக்க இருந்த குழந்தைகூட இறந்து போனது கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையிலே என்பது நெஞ்சை உருக்குவதாக இருக்கிறது. எனவே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இப்படிப்பட்ட உயிர் காக்கின்ற நிலையங்களுக்கு மின்சாரம் தடையேற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு வழியிருக்கிறதா? அல்லது மின்சாரம் வேறுவகையிலே உற்பத்தி செய்வதற்கு வழி வகுப்பார்களா என்று முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பொறுப்பேற்று வந்து 100 நாட்கள்கூட ஆகவில்லை. ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சியிலோ அதற்கு முன்பிருந்த ஆட்சியிலோ இதுபோல மின்சாரத் தடை வந்தால் மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் மூலம் மின்சார ஒளி வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். எனவே குறை எங்கள் மீதல்ல. முன்பு ஆண்டவர்கள் மீதுதான்.

5. உரிமைப் பிரச்சினை.

நமது எம்.ஜி.ஆர். நாளிதழ் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20—2—1989 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் 'நமது எம்.ஜி.ஆர்.' நாளேடு மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார். அப்போது இது குறித்துப் பேசுகையில் அந்த நாளேடு, தான் 14—2—1989 அன்று பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதத்தில கலந்துகொண்டு பேசிய பேச்சைத் திரித்து உள்நோக்கத்துடன் வெளியிட்டுள்ளது என்றும், எனவே இது அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்றும் குறிப்பிட்டார். இது குறித்து அந்நாளேடு ஆசிரியரிடம் விளக்கம் கேட்டுப் பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

நாளேடு ஆசிரியரிடம் இது குறித்து விளக்கம்கேட்கப் பட்டது. அவர் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தை அளித்துள்ளார்;—

''14—2—1989 அன்று பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து திருமதி பாப்பா உமாநாத், எம்.எல்.ஏ., அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதி எங்களுடைய' நமது எம்.ஜி.ஆர்.' 15—2—1989 இதழில் மாற்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறோம். கவனக் குறைவால் இப்படிப்பட்ட தவறு நிகழ்ந்திருக்கின்றதே தவிர தொடர்புடைய உறுப்பினரின் பேச்சைத் திரித்து வெளியிடுகின்ற நோக்கம் எதுவும் எங்களுக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்றோம். அவ்வாறு தவறு நிகழ்ந்தமைக்காக வருந்துகிறோம். மற்றபடி அவை உரிமையை மீறுகின்ற நோக்கம் எங்களுக்கு இல்லை என்பதோடு பொறுப்புள்ள பத்திரிகை என்கிற அளவில் அவையின் உரிமைகளை மதித்துப் போற்றுவதில் நாங்கள் கண்ணும் கருத்துமாகச் செயல்படுவோம் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, இந்த விளக்கத்தை ஏற்று, இது குறித்து மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

2. அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989—90 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு திரு. பி. துரைசாமி—பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. பெ. ஆசையன்
3. திரு. எம். இராமச்சந்திரன்
4. திரு. ஆர். சாமிநாதன்
5. திரு. கே. சுந்தர்
6. திரு. பா. மனோகரன்
7. திரு. ப. முத்துசாமி
8. திரு. ஆ. அறிவழகன்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS